செய்தி வெளியீடு எண் : 1057 நாள் : 31.05.2023

# செய்தி வெளியீடு

## டோக்கியோ மற்றும் சென்னை இடையே நேரடி விமான சேவையை மீண்டும் அறிமுகப்படுத்தவும், சிங்கப்பூர் - மதுரை இடையேயான விமானங்களின் எண்ணிக்கையை அதிகரித்திடவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் மாண்புமிகு ஒன்றிய சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஜோதி ராதித்ய சிந்தியா அவர்களுக்குக் கடிதம்

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், டோக்கியோ - சென்னை இடையே நேரடி விமான சேவையை மீண்டும் இயக்குவது குறித்தும், சிங்கப்பூர் - மதுரை இடையேயான விமானங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது குறித்தும் மாண்புமிகு ஒன்றிய சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஜோதி ராதித்ய சிந்தியா அவர்களுக்கு இன்று (31 - 5 - 2023) கடிதம் எழுதியுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், தமிழ்நாட்டில் முதலீடுகளை ஈர்ப்பதற்காகவும், 2024 ஜனவரியில் தமிழ்நாடு அரசு நடத்த உத்தேசித்துள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளுமாறு தொழில் முதலீட்டாளர்களை அழைப்பதற்காகவும் சிங்கப்பூர், ஜப்பான் ஆகிய நாடுகளுக்கு வெற்றிகரமாக சுற்றுப்பயணத்தை தாம் மேற்கொண்டுள்ளதைக் குறிப்பிட்டு, தனது பயணத்தின் போது, அரசு மற்றும் தொழில் நிறுவனங்களைச் சார்ந்த தலைவர்கள் மற்றும் புலம்பெயர்ந்த இந்தியர்களை, குறிப்பாக தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களைச் சந்தித்ததை குறிப்பிட்டுள்ளார்.

தமிழ்நாட்டில், நிசான், தோஷிபா, யமஹா, கோமேட்ஸு, மிட்சுபிஷி, ஹிட்டாச்சி போன்ற பல ஜப்பானிய பெருநிறுவனங்கள் தங்களது உற்பத்தி ஆலைகளை அமைத்துள்ளதையும், ஜப்பான் - இந்தியா முதலீட்டு ஊக்குவிப்பு கூட்டாண்மைத் திட்டத்தின்கீழ் இந்தியாவில் நிறுவப்பட்டுள்ள 12 தொழில் நகரங்களில், மூன்று தமிழ்நாட்டில் உள்ளதையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் பெருமைபட சுட்டிகாட்டியுள்ளார். தமிழ்நாட்டில் 600 - க்கும் மேற்பட்ட ஜப்பானிய நிறுவனங்கள் செயல்பட்டு வருவதால், கடந்த இருபதாண்டுகளில் ஜப்பான் நாட்டினரின் வருகை கணிசமாக உயர்ந்துள்ளதாகவும், இந்தியாவில், ஜப்பானிய சமூகத்தின் மிகப்பெரிய தாயகமாக சென்னை திகழ்வதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். அதோடு, ஜப்பானில் கணிசமான புலம்பெயர்ந்த

தமிழர்கள் உள்ளதையும், குறிப்பாக தகவல் தொழில்நுட்பம் மற்றும் நிதி தொடர்பான துறைகளில் அவர்கள் வல்லுநர்களாக உள்ளதையும் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதன் விளைவாக, தமிழகத்திற்கும் ஜப்பானுக்கும் இடையிலான பொருளாதார மற்றும் கலாச்சார உறவுகள் தொடர்ந்து வலுவடைந்து வருவதுடன், சுற்றுலா வடிவிலும் இருநாட்டு மக்களுக்கு இடையிலான உறவுகள் வளர்ந்து வருவதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது சென்னைக்கும் டோக்கியோவுக்கும் இடையே நேரடி விமான சேவை இல்லை என்றும், 2019 ஆம் ஆண்டு, அக்டோபர் மாதத்தில், ஜப்பான் நாட்டின் மிகப்பெரிய விமான நிறுவனமான ஆல் நிப்பான் ஏர்வேஸ் (ANA) சென்னை மற்றும் டோக்கியோ இடையே நேரடி விமான சேவையைத் தொடங்கியதாகவும், கோவிட்-19 தொற்றுநோய் காலத்தில் இது நிறுத்தப்பட்டதாகவும் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். அதன்பிறகு இந்த விமான சேவை மீண்டும் தொடங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார். நேரடி விமான இணைப்பு இல்லாததால், சென்னைக்கும் டோக்கியோவுக்கும் இடையிலான பயண நேரம் சுமார் 7 மணி நேரம் இரட்டிப்பாகியுள்ளதாகவும், சென்னை-டோக்கியோ இடையே நேரடி விமான சேவையை மீண்டும் தொடங்க வேண்டும் என்று தமிழ்நாட்டில் உள்ள ஜப்பானிய தொழில் நிறுவனங்களைச் சார்ந்தவர்களிடமிருந்து தொடர்ந்து கோரிக்கைகள் வந்து கொண்டிருப்பதாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

2024, ஜனவரி மாதத்தில் உலக முதலீட்டாளர்கள் மாநாட்டை தமிழ்நாடு நடத்தவுள்ள நிலையில், ஜப்பானிலிருந்து அதிக முதலீடுகளை ஈர்த்திட ஏதுவாக, நேரடி விமானங்களை மீண்டும் தொடங்குவது உண்மையில் வரவேற்கத்தக்க நடவடிக்கையாக இருக்கும் என்று குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இவற்றைக் கருத்தில் கொண்டு, சென்னைக்கும் டோக்கியோவுக்கும் இடையே நேரடி விமான சேவையை மீண்டும் தொடங்கத் தேவையான நடவடிக்கைகளை உடனடியாக எடுக்குமாறு ஒன்றிய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

அதேபோல், சிங்கப்பூரில் தமிழ் வம்சாவளியைச் சேர்ந்த சுமார் 4 இலட்சம் பேர் கணிசமான அளவில் வசித்து வருவதாகவும், அவர்கள் இன்னும் தமிழ்நாட்டில் தங்கள் சொந்த நகரங்கள் மற்றும் கிராமங்களில், முக்கியமாக தென் தமிழ்நாட்டில் தொடர்புகளைக் கொண்டுள்ளதாகவும், தமிழ்நாட்டின் தென் மாவட்டங்களில் இருந்து பலர்

சிங்கப்பூருக்கு வேலைக்காக செல்கின்றனர் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். சிங்கப்பூருக்கும், சென்னைக்கும், திருச்சிக்கும் இடையே தினசரி விமான சேவையும், சிங்கப்பூருக்கும், கோயம்புத்தூருக்கும் இடையே தினசரி ஒரு விமானமும் இயக்கப்பட்டு வரும் சூழ்நிலையில், சிங்கப்பூருக்கும் மதுரைக்கும் இடையே வாரத்திற்கு மூன்று முறை மட்டுமே விமானச் சேவை உள்ளதாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார். சிங்கப்பூருக்கும் மதுரைக்கும் இடையே அதிக விமானங்கள் இயக்கப்பட வேண்டும் என்ற பிரச்சினையை சிங்கப்பூர் அரசின் உள்துறை மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.கே.சண்முகம் அவர்கள் தன்னைச் சந்தித்தபோது எழுப்பியதாகவும், இதேபோன்ற கோரிக்கையை சிங்கப்பூரில் உள்ள புலம்பெயர் தமிழ் மக்கள் பலரும் முன்வைத்ததாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டு, சிங்கப்பூருக்கும் மதுரைக்கும் இடையில் அதிக விமானங்களை இயக்கிட அனுமதிக்க வேண்டும் என்கிற கோரிக்கையை சாதகமாக பரிசீலித்திட ஒன்றிய அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

டோக்கியோ மற்றும் சென்னை இடையே நேரடி விமான இணைப்பை மீண்டும் அறிமுகப்படுத்த வேண்டும் மற்றும் சிங்கப்பூர்-மதுரை இடையே விமானங்களின் எண்ணிக்கையை, குறைந்தபட்சம் ஒரு தினசரி விமானமாக அதிகரிக்க வேண்டும் என்ற இரண்டு கோரிக்கைகளை தான் மீண்டும் வலியுறுத்துவதாகவும், இவற்றை முன்னுரிமை அடிப்படையில் மாண்புமிகு ஒன்றிய சிவில் விமான போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு. ஜோதி ராதித்ய சிந்தியா அவர்கள் பரிசீலித்திட வேண்டுமென்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தனது கடிதத்தில் கேட்டுக் கொண்டுள்ளார்.

- - - - - -

# PRESS RELEASE

## Text of the D.O. Letter of Thiru M.K. Stalin, Hon'ble Chief Minister of Tamil Nadu addressed to Hon'ble Union Minister of Steel, Civil Aviation Thiru Jyotiradiya M. Scindia:

As you are aware I had undertaken a successful tour to Singapore and Japan primarily to attract investment into Tamil Nadu and to invite prospective investors to attend the Global Investors Meet that the Government of Tamil Nadu has proposed to hold in January, 2024. In the course of my visit, I met Government and business leaders and members of the Indian diaspora community, specifically those hailing from Tamil Nadu.

Many large Japanese conglomerates like Nissan, Toshiba, Yamaha, Komatsu, Mitsubishi and Hitachi have set up their manufacturing facilities in Tamil Nadu. Out of the 12 industrial townships established in India under the Japan-India Investment Promotion Partnership Program, three are in Tamil Nadu. With more than 600 Japanese companies having establishments in the State, over the last two decades, the influx of Japanese expatriates has slowly increased and I am happy to state that Chennai is home to the largest Japanese community in India. At the same time, Japan also has a significant Tamil diaspora, in particular professionals in the Information Technology and finance related fields. Resultantly, there has been a steady strengthening of economic and cultural relations between Tamil Nadu and Japan and people to people relationships in the form of tourism is also growing.

I wish to point out that at present there is no direct flight connectivity between Chennai and Tokyo. In October 2019, All Nippon Airways (ANA), Japan's largest airline, launched a direct flight service between Chennai and Tokyo which was discontinued during the Covid 19 pandemic. This service has not been resumed subsequently. The lack of direct flight connectivity more than doubles the travel time between these two destinations by about 7 hours, which is significant. There have been persistent requests from the Japanese business community in Tamil Nadu to resume direct flight services between Chennai and Tokyo.

The State is to host the Global Investors' Meet in January 2024 and as we seek to attract greater investments from Japan, resumption of direct flights would indeed be a commendable measure. Considering the above, I request you to kindly direct the Ministry of Civil Aviation to take necessary steps to resume direct flight services between Chennai and Tokyo.

Likewise, as you know Singapore has a sizeable population of nearly 4 lakh persons of Tamil origin, who still maintain roots in their native towns and villages, predominantly in southern Tamil Nadu. Further, many persons travel from the southern districts of Tamil Nadu for employment to Singapore. While there are

multiple daily flight connections between Singapore and Chennai and Tiruchirappalli and one daily flight between Singapore and Coimbatore, there is only a tri-weekly flight between Singapore and Madurai. This issue of more flight services between Singapore and Madurai was raised by the Minister for Home Affairs and Law of the Government of Singapore, Thiru K.Shanmugham when he met me. A similar request was also raised by many members of the Tamil diaspora in Singapore. I would be grateful if the request of permitting more flights to operate between Singapore and Madurai is favourably considered.

I reiterate the two requests of the re-introduction of direct flight connectivity between Tokyo and Chennai and the increase in the number of flights between Singapore and Madurai to at least one daily flight at the earliest. I request you to kindly consider these two proposals on a priority basis.

------

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in